# வாசிகசாலை ஆண்டறிக்கை 2024

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | வாசிகசாலை செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0008 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020 செப்டம்பர் |
| அறிக்கையிடல் காலம் | 2024 ஜனவரி - 2024 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நடு குழுமம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நடு குழுமம், பத்திரிகை வழங்குனர்கள் |
| அறிக்கையிடல் காலத்திற்குரிய செயற்றிட்டச் செலவு | 324,000 ரூபா |

செயற்றிட்ட அறிமுகம்

நூலக நிறுவனமானது 2020 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் பேசும் சமூகங்களுடைய சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்ற பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை திறந்த அணுக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்றிட்டம் வாசிகசாலை ஆகும். இச்செயற்றிட்டத்தின் கீழ் இலங்கை தமிழ் சமூகம் சார்ந்து இலங்கையிலும் பிற நாடுகளிலும் வெளிவரும் நாளாந்த , வாராந்த , மாதாந்த பத்திரிகைகள், இதழ்கள் , சஞ்சிகைகளை மின்வருடியும் , மென்கோப்பு வடிவிலும் செயற்றிட்ட முகப்பின் கீழ் இணைக்கப்பட்டு வருகிறது.

செயற்றிட்ட  இலக்கு

- சமகாலத்தில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்களை அடையாளங்கண்டு சேகரித்து மின்வருடியோ , மென்கோப்பு வடிவிலோ இலவச அணுக்கத்திற்காக இணைத்தல்.

செயற்றிட்ட நோக்கம்

- சமகாலத்தில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் பற்றிய பட்டியல் ஒன்றினைத் தயாரித்தல்
- நாளாந்தம் வெளியிடப்படுகின்ற பத்திரிகைகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட பத்திரிகைகளை எண்ணிமப்படுத்தல், அவற்றை இணையதளத்தில் பதிகை இடலுடன் மீள கையளிக்க வேண்டிய ஆவணங்களை கையளித்தல்.
- இலங்கை தமிழ் சமூகம் தொடர்பாக இலங்கையிலும் , பிற நாடுகளிலும் உள்ள பத்திரிகை, சஞ்சிகை, இதழ் ஆகியவற்றை அடையாளங்காணல்.
- வலையத்தளத்தில் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களுக்கான அனுமதியினை பெறல்.

வாசிகசாலை செயற்றிட்டங்கள்/ அடைவுகள்

2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை 55,074 பத்திரிகைகள், இதழ்கள் , சஞ்சிகைகள் ஆகியவை எண்ணிமப்படுத்தப்பட்டோ , மென்கோப்பு வடிவிலோ இலவச அணுக்கத்திற்காக இணைக்கப்பட்டுள்ளது.

**2024** ஆண்டிற்கான அடைவுகள்

- 2024 ஆம் ஆண்டு இச்செயற்றிட்டத்தின் கீழ் 3178 பத்திரிகைகள், 192 சஞ்சிகைகள் , 43 பிறநாட்டு சஞ்சிகைகல் என்பன இலவச அணுக்கத்திற்காக இணைக்கப்பட்டுள்ளன.

| பத்திரிகைகள் | அடைவு | சஞ்சிகைகள் | அடைவு | பிறநாட்டு சஞ்சிகைகள் | அடைவு |
|---|---|---|---|---|---|
| உதயன் | 366 | ஞானம் | 15 | காலம் | 01 |
| வலம்புரி | 366 | ஜீவநதி | 45 | தாய்வீடு | 12 |
| காலைக்கதிர் | 363 | நிமிர்வு | 03 | காற்றுவெளி | 10 |
| தமிழ் Mirror | 250 | தென்றல் | 03 | கலசம் | 07 |
| ஈழநாடு | 362 | சிவபூமி | 07 | சிவத்தமிழ் | 01 |
| பாதுகாவலன் | 41 | ஞானச்சுடர் | 09 | மண் | 12 |
| தேசியம் | 43 | அனல் | 06 | | |
| தமிழன் | 25 | துமி | 12 | | |
| சுபீட்சம் | 27 | குருதீபம் | 02 | | |
| தென்னாடு | 12 | எழுநா | 12 | | |
| தீம்புனல் | 52 | தமிழர் பொருண்மியம் | 40 | | |
| காலைமுரசு | 366 | Jaffna Monitor | 24 | | |
| தினகரன் | 279 | வெண்ணிலா | 14 | | |
| மாலைமுரசு | 367 | | | | |
| மாலைக்கதிர் | 259 | | | | |

- இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் வாசிகசாலைப் பகுப்பிலிருந்த அருள்ஒளி, அமுதநதி, கமத்தொழில் விளக்கம், சிவதொண்டன், நான், செம்மண், இந்து

தமிழர் குரல் ஆகிய வெளியீடுகள் தொடர்ந்து வெளியிடப்படாததால் வாசிகசாலைப் பகுப்பிலிருந்து பிரதான நூலகப்பகுப்பிற்கு மாற்றப்பட்டது.

சவால்களும் அதனை எதிர்கொள்ளும் பொறிமுறைகளும்

செயற்றிட்டம் நடைப்பெற்ற கால அடிப்படையில் எதிர்கொண்ட சாவல்களும் அதனை சமாளிப்பதற்கு பயன்படுத்திய பொறிமுறைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- வாசிகசாலைக்கு பத்திரிகைகள் உரிய நேரத்தில் பெறமுடியாமை. முகவர்கள் உரிய நேரத்தில் பத்திரிகை கையளிக்காது போகின்ற சந்தர்ப்பத்தில் நேரடியாக முகவர் நிலையங்களுக்கு சென்று பத்திரிகைகளை பெற்று எண்ணிமப்படுத்தல்.
- Online ஊடாக சஞ்சிகைகளை பெறுவதில் ஏற்படும் தாமதம் : தொடர்ச்சியான தொடர்பாடலூடாக விரைவாக பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

பின்னிணைப்பு

[வாசிகசாலை]